# சாந்தனின் இறுதி ஊர்வலத்தில் திரண்ட மக்கள் கண்ணீருக்கு மத்தியில் புகழுடலுக்கு அஞ்சலி!

மறைந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் (சாந்தன்) புகழுடலுக்கு இறுதிக்கிரியை இன்று நடைபெற்று இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியுள்ளது.

உடுப்பிட்டி - இலக்கணாவத்தையில் உள்ள சாந்தனின் சகோதரியின் இல்லத்தில் சமய சடங்குகளுடன் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றிருந்தன.

சாந்தனின் தாய் மற்றும் சகோதரி உள்ளிட்ட நெருங்கிய உறவினர்களால் புகழுடலுக்கு இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து ஊர்மக்களால் அருகில் உள்ள சனசமூக நிலையமொன் 2





மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 21 திங்கட்கிழமை 04.03.2024 கதிர் 194

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



## தேங்காயின் விலை அதிகரிப்பினால்தானாம் உணவுப் பொதியின் விலையும் அதிகரித்தது!

### சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் விளக்கம்

தேங்காயின் விலை வேகமாக அதிகரித்து வருவதால் உணவுப் பொதி ஒன்றின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

60 தொடக்கம் 80 ரூபாவாக இருந்த சாதாரண தேங்காய் ஒன்றின் விலை தற்போது 120 முதல் 150 ரூபா வரை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார். கறி தயாரிப்பில் தேங்காய்ப்பாலை பயன்படுத்துவது அத்தியாவசியமானது எனவும், இந்நிலையில் தேங்காய் விலை உயர்வால் பல உணவக உரிமையாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு காரணமாக உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு மற்றும் பானங்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே ஹர்ஷன ருக்ஷான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அரிசி, முட்டை, கோழி, எரிவாயு உள்ளிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதுடன், 2

## சம்பள அதிகரிப்பு தொடர்பில் மத்திய வங்கி அதிகாரிகளுக்கு நாளை அழைப்பு



மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நாளை (5ஆம் திகதி) நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு 2

## தென்னைகளில் வெண் ஈ தாக்கம் அதிகரித்து வருவதாக தெரிவிப்பு



வடமாகாணத்தில்நிலவும்வெப்பமான காலநிலையைத்தொடர்ந்து. தென்னை மரங்களில் வெண் ஈ தாக்கம் அதிகரித்து வருகிறது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இதன் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது.

கிளிநொச்சி அம்பாள் குளப் பகுதியில் இதன் தாக்கத்தை அவதானிக்க முடிகிறது. தென்னை ஓலைகள் கறுப்பு நிறமாகி, கருகிச் செல்கின்றன. வெண்ணிற ஈ பறந்து திரிவதையும் அவதானிக்க முடிகிறது. (02)

## களுத்துறையில் திடீரென அகற்றப்பட்ட 25 லொத்தர் விற்பனைக் கூடங்கள்!

### லொத்தர் விற்பனையாளர்கள் வருமானமின்றி அவதியில்

களுத்துறை நகர சபை, களுத்துறை தெற்கு பொலிஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் அதிகாரிகள் இணைந்து களுத்துறை நகரிலுள்ள லொத்தர் விற்பனை கூடங்களை கடந்த 29 ஆம் திகதி இரவு அங்கிருந்து அகற்றி எடுத்துச் சென்றதாக களுத்துறை நகரில் லொத்தர் விற்பனை செய்பவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு அகற்றி கொண்டு செல்லப்பட்ட லொத்தர் கூடங்களின் எண்ணிக்கை சுமார் 25 என அவர்கள் கூறியுள்ளனர்.

களுத்துறை லொத்தர் விற்பனை முகவர்கள் சங்கத்தின் உறுப்பினர் கே.பி. டி சில்வா இதுபற்றி கூறுகையில் "விற்கப்படும் ஒவ்வொரு லொத்தரிலிருந்தும் தொண்ணூறு சதவீத பணம் அரசாங்கத்திற்கே செல்கின்றது. இன்று அது இல்லாமல் ஆகிவிட்டது. எங்களுக்கு இதுபற்றி எந்தவொரு முன்னறிவிப்பும் வழங்கப்படவில்லை. நமது விற்பனை கூடங்கள் அங்கீகரிக்கப்படாதவை அல்ல. ஏன் இப்படி செய்தார்கள் என தெரியவில்லை. 2

## மின்சார சபையின் மேலதிக முகாமையாளரொருவருக்கு 35 சொகுசு வீடுகளும் 63.5 கேவி சோலார் பனலும் உள்ளன!

### தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டது

இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் ஒருவருக்கு 35 சொகுசு வீடுகளும் 63.5 கிலோ வோல்ட் திறன் கொண்ட சோலார் பனல் அமைப்பும் சொந்தமாக உள்ளமை தெரியவந்துள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி மேலதிக பொது முகாமையாளர், மேல் மாகாணத்தின் ஒரு பிரதேசத்தில் சில பொதுச் சேவைகளில் முக்கிய பங்கினை ஆற்றி வருபவர் எனவும் கூறப்படுகின்றது. கொம்பனித் தெரு, குருநாகல் மற்றும் இரத்மலானை ஆகிய இடங்களில் இவருக்குச் சொந்தமான மேற்படி சொகுசு வீடுகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது .

இலங்கை மின்சார சபையால் பயன்படுத்தப்படுகின்ற குறிப்பிட்ட ஒரு கட்டிடமும் இவருக்கே சொந்தமானதெனவும், மூன்றாம் தரப்பொன்றின் ஊடாகவே மின்சார சபைக்கு இந்த கட்டிடத்தை இவர் குத்தகைக்கு கொடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது குறித்தான விபரங்கள் இலங்கை மின்சார சபையின் தகவல் முகாமைத்துவ கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் குறித்த மேலதிக பொது முகாமையாளரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், கணக்கு இலக்கம் உட்பட அனைத்து விபரங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

பொதுப்பணித்துறையில் உள்ள இவர் இவ்வாறு ஏராளமான சொத்துக்களை சம்பாதித்த விதம் சிக்கலாக உள்ளதாக மின்சார சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-07)

## மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகின!

### குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு

மேல்மாகாண 10 மற்றும் 11 ஆம் தர மாணவர்களுக்கான மூன்று பாடங்களின் வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகியமையினால் குறித்த பரீட்சைகளை இரத்து செய்ய மேல்மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதையடுத்து, இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 4, 5, 6 ஆம் திகதிகளுக்கான ஆங்கிலம், கணிதம், அழகியல் பாடங்கள் தொடர்பான வினாத்தாள்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இப்படங்களுக்கான பரீட்சைகள் வேறொரு நாளில் நடத்தப்படும் என மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இருப்பினும், மேல்மாகாணத்தில் தரம் 6 முதல் தரம் 9 வரையான பரீட்சை எவ்வித முறைகேடும் இன்றி 2

# இந்த வருடம் ஜனவரி மாத சுற்றுலாத்துறை வருமானம் 342 மில்லியன் அமெரிக்க டொலர்

## இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி இந்த வருடம் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை மூலம் 342 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையின்படி, 2023 ஜனவரியில் சுற்றுலா வருமானமாக 154 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதுடன், இதனுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு சுற்றுலா வருமானத்தின் வளர்ச்சி 122.7 வீதமாகும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜனவரி 2024 இல் பதிவாகியுள்ள இந்த சுற்றுலா வருமானம் 2020 ஜனவரி மாதத்திற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட மிகக் கூடிய மாதாந்த பெறுமதி எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ரெம-10)

# பெரும்போக நெல் அறுவடையின்போது 3,50,000 தொன் பயிர் இழப்பு!




பெரும்போக நெல் அறுவடையின் போது, ஏற்பட்டுள்ள இழப்பு 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகவும், சில பகுதிகளில் அது 25 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, பெரும்போகத்தின் 3 லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் பயிர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெற்பயிர் நீண்டகாலமாக பயிரிடப்பட்டிருந்தாலும் அது எப்போது விளையும் என்ற புரிதல் இல்லாமையே இதற்கு பிரதான காரணமாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பயிர்ச் சேதங்களால் ஏற்பட்டுள்ள இழப்பு பில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதி என மதிப்பிடப்பட்டுள்ளது.

# எந்தவொரு தேர்தலுக்கும் போதுமான அச்சிடல் காகிதங்கள் கையிருப்பில்!

## அரசாங்க அச்சக அதிகாரி தெரிவிப்பு

வாக்குச்சீட்டுகள் மற்றும் பிற அச்சிடும் பணிகள் உட்பட வரவிருக்கும் எந்தவொரு தேர்தலுக்கும் போதுமான காகிதங்கள் அரசாங்க அச்சகத்தில் கையிருப்பில் உள்ளதாக உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலொன்று நடைபெறுமாயின், அச்சிடல் பணிகளுக்கான நாளாந்த செலவாக 100-200 மில்லியன் ரூபாவும், பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்படல் வேண்டுமெனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அச்சக ஊழியர்கள் இரவு,பகலாக பணியாற்ற வேண்டியிருக்கும் எனவும், அவர்களுக்கான கொடுப்பனவுகள் முறைப்படி வழங்கப்படல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், அந்த தேர்தலானது ஒத்திவைக்கப்பட்டது, ஆனால் அந்த வாக்கெடுப்புக்குத் தேவையான பெருமளவான அச்சடிக்கும் பணிகளை அரச அச்சகம் பூர்த்தி செய்திருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-11 )

### சாந்தனின் இறுதி .......

றுக்கு புகழுடல் தாங்கிச் செல்லப்பட்டதுடன் அங்கு பொதுமக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

இறுதி ஊர்வலம் அறிவகம் சனசமூக நிலையம், தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம், வீரகத்தி விநாயகர் சனசமூக நிலையம் ஊடாக நாவலடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஊடாகப் பயணித்து எள்ளங்குளம் இந்து மயானத்தில் சாந்தனின் புகழுடல் நல்லடக்கம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சம்பள அதிகரிப்பு......

மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, நாளை காலை 10.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளதாக நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 1 ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரெம-08)

### களுத்துறையில்.......

இது பற்றி விசாரிப்பதற்காக சுமார் முப்பது பேர் கொண்ட லொத்தர் விற்பனையாளர்கள் குழுவொன்று களுத்துறை மாநகர ஆணையாளர் பியூமாலி குலரத்னவைச் சந்தித்த போது, மூன்று வாரங்களுக்கு முன்னரே இந்த அனுமதியற்ற கடைகளை அகற்றுமாறு அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்ததாக மாநகர ஆணையாளர் காரணம் கூறியுள்ளார்" என்றார். (ரெம-06)

### தேங்காயின் விலை....

தேங்காய் ஒன்றின் விலை வேகமாக அதிகரித்து வருவதால் உணவுப் பொதி ஒன்றின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு விலை அதிகரிகரிக்கும் போது தேங்காய் எண்ணெய்யின் விலையும் அதிகரிப்பதால் அதுவும் உணவு தயாரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-05)

### மேல் மற்றும் .......

நடத்தப்பட்டதாகவும், அனைத்து வினாத்தாள்களையும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தினால் அச்சிட்டு பிரதேச அலுவலகங்களில் வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வினாத்தாள்கள், வலய அலுவலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு, பரீட்சை நடைபெறும் நாளில் அந்தந்த அதிபர்கள் மூலமாக பாடசாலைகளுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்ததாகவும், இத்தகைய பாதுகாப்பான சூழ்நிலையில் எவ்வாறு சமூக ஊடகங்களில் வினாத்தாள்கள் வெளியானது என்பது குறித்து ஆராயுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்தில் இன்று (4ஆம் திகதி) நடைபெறவிருந்த ஆங்கில வினாத்தாளும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளதாக அறியவந்தமையினால், இன்று (4) நடைபெறவிருந்த குறித்த பரீட்சையும் இரத்துச் செய்யப்பட்டதாக சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் சாமர பமுனு ஆராச்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 10 ஆம் தர ஆங்கில இரண்டாம் வினாத்தாள் பரீட்சைக்கு சில தினங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் வெளியாகியமை தெரியவந்துள்ளதாக மாகாண கல்வி செயலாளர் தெரிவித்துள்ளார். அந்த வினாத்தாள் சமூக ஊடகங்களுக்கு எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்பது குறித்தும் ஆராய சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பிரகாரம், ஊடகங்களுக்கு விசாரணைக் குழுவொன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெம-04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சிறுவர்களை மகிழ்ச்சியான சூழலில் வைத்திருப்போம்! அம்பாறையில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

“எதிர்காலத் தலைவர்களான சிறுவர்களை மகிழ்ச்சியான சூழலில் வைத்திருப்போம்” எனும் தொனிப்பொருளில் அம்பாறை ஹாடி உயர் தொழிநுட்ப நிறுவனத்தின் மாணவர்கள் சம்மேளனம் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின்ஸ்தாபகர், கனடாவைச்சேர்ந்த ஈவன் ஏ ஹாடியின் 60 வது சிரார்த்த தினத்தையொட்டி அம்பாறை வேரன்கெற்றகொட கொத்மல வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி.யின் வாழ்க்கைச் சரிதை நூல் வெளியீடு நாளை



நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதியுள்ள மகே கதாவ (எனது கதை) என்ற வாழ்க்கைச் சரிதை நூல்நாளை மாலை 3.45 மணிக்கு கொழும்பு 10, ஆனந்த கல்லூரியின் குலரத்ன கேட்போர் கூடத்தில் வெளியிடப்படவுள்ளது.

சிங்களத்தில் வெளியிடப்படும் இந்நூல் மிக விரைவில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளது .

குறித்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்மற்றும்வெளிநாட்டுத் தூதுவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, வல்பொல ராகுல பௌத்த கல்வி நிறுவனத்தின் பணிப்பாளரும் களனிப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கல்கந்தே தம்மானந்த தேரர், பிரபல ஊடகவியலாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய, இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளரும் பிரபல ஊடகவியலாளருமான ஏரானந்த ஹெட்டிஆராச்சி ஆகியோரால் நூல் தொடர்பான கருத்துரைகள் நிகழ்த்தப்படவுள்ளன.

வாழ்க்கையோட்டத்தில் தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் முகமாக 19 அத்தியாயங்களில் தமது சிறுபராயம், பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, சட்டக் கல்லூரிக் கல்வி, மாணவ காலப் போராட்டத்தோடு ஐந்து தசாப்த கால கொள்கை ரீதியான அரசியல் பயணப் பாதை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை அடங்கலான இந்த சுயசரிதை நூல், அவர் கல்வி கற்ற ஆனந்த கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

# சர்வதேச மகளிர் தினம் சாவகச்சேரியில் நிகழ்வு!




வருடாந்தம் மகளிர் தின விழா மாகாண அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் மார்ச் மாதம் 6ஆம் திகதி “அவளையும் உள்வாங்குங்கள் - பொருளாதார வலுவூட்டல் மூலம் பாலின சமத்துவத்தைத் துரிதப்படுத்துதல்” எனும் தொனிப்பொருளில் சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின விழா நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் ஒரு அங்கமாக பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனைக்கூடமும் வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 7.30 மணி வரை குறித்த வளாகத்தில் நடைபெற உள்ளது

# தென்கிழக்குப் பலகலைக்கழகத்தில் தமிழ்நாட்டு நூல் தொகுதி அறிமுகம்




(எம் எப் எம். நவாஸ்)

இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் நடாத்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் ‘ஸிஹாஹ் ஸித்தா’ கிரந்தங்களின் (தமிழ்) மொழிபெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் ‘மிஷ்காத்துல் மஸாபீஹ்’ (தமிழ்) நூல் வெளியீடும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களது தலைமையில் நேற்று (03) பல்கலைக்கழக கலை கலாசார கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



சர்வதேசப் புகழ் ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீட்டின் நெறியாள்கையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், துறை சார்ந்தவர்கள், கவிஞர்கள் எனப் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# இஸ்ரேல் அமைச்சர் பென்னி கான்ட்ஸ் ஞாயிறன்று அமெரிக்காவுக்குப் பயணம்

ஹமாஸ்படையினர்உடனான போரில் இஸ்ரேலுக்கான ஆதரவை வலுப்படுத்தும் நோக்கில், அந்நாட்டு அமைச்சர் பென்னி கான்ட்ஸ் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்குச் சென்றார்.

இஸ்ரேல் அரசின் விதிமுறைப்படி, அந்நாட்டு அமைச்சர்கள் வெளிநாடு செல்ல பிரதமரிடம் அனுமதி பெற வேண்டும். ஆனால், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் அனுமதி இல்லாமல், பென்னி கான்ட்ஸ் அமெரிக்கா சென்றுள்ளார்.

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் உள்ளிட்டோரை அவர் சந்திக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெதன்யாகுவின் அனுமதி இல்லாமல், பென்னி அமெரிக்கா சென்றுள்ளது, அந்நாட்டுப் போர்ச் சூழலுக்காக அமைக்கப்பட்ட அவசரகால அமைச்சரவை அரசில் பிளவு ஏற்பட்டுள்ளதோ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய ஒற்றுமைக் கட்சித் தலைவரும், மிதவாதியுமான பென்னி கான்ட்ஸ், இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் போர் தொடங்கிய பின்னர், நெதன்யாகுவின் கூட்டணி அரசில் சேர்ந்தார். அத்துடன் போரைத் திறம்பட கையாள உருவாக்கப்பட்ட குழுவில் அமைச்சராகவும் இடம்பெற்றார்.

இந்நிலையில், போரால் காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனர்களின் துயரத்தை எவ்வாறு தணிப்பது, போருக்குப் பின்னர் காஸாவின் நிலை ஆகியவை தொடர்பாக அமெரிக்கா அதிபர் ஜோ பைடன், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இடையே கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, போருக்குப் பின்னர் காஸா எப்படி இருக்க வேண்டும் என்ற திட்டத்தை நெதன்யாகு வெளியிட்டுள்ளார்.

அந்தத் திட்டத்தின்படி, போருக்குப் பின்னர் காஸாவில் குடிமக்கள் விவகாரங்களை பாலஸ்தீனர்களே கையாள்வதற்கு அவர் முன்மொழிந்துள்ளார். ஆனால் காஸாவை பாதுகாக்கும் அதிகாரம் காலவரையின்றி இஸ்ரேலிடமே இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் பாலஸ்தீனத்தை தனி நாடாக்குவதை நோக்கி முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. இதற்கு நெதன்யாகுவும், அவர் தலைமையிலான அரசில் இடம்பெற்றுள்ள சில அமைச்சர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்தச் சூழலில், அமெரிக்கா உடனான உறவை வலுப்படுத்தவும், காஸாவில் இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்காவின் ஆதரவை நீடிக்கவும், ஹமாஸிடம் எஞ்சியுள்ள பிணைக் கைதிகளை விடுவிக்க அழுத்தம் அளிக்குமாறு வலியுறுத்தவும் பென்னி கான்ட்ஸ் அமெரிக்கா சென்றுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பயணம் தொடர்பாக நெதன்யாகுவிடம் பென்னி கான்ட்ஸ் பேசிய போது, பென்னியை நெதன்யாகு கடிந்துகொண்டார். நாட்டுக்கு 'ஒரு பிரதமர்' மட்டுமே இருக்க முடியும் என்றும் பென்னியிடம் நெதன்யாகு கடுமையாகப் பேசிய நிலையில், தனது பயணத்தின் நோக்கத்தை பிரதமரிடம் பென்னி தெரிவித்தார். இதைத்தொடர்ந்து



நெதன்யாகுவின் அனுமதி இல்லாமல் பென்னிஅமெரிக்கா சென்றுள்ளார், என்று தெரியவந்துள்ளது.

இஸ்ரேலில் தற்போது தேர்தல் நடைபெற்றால், அதில் வெற்றிபெற்று பிரதமராக பென்னிக்கு போதிய ஆதரவு கிடைக்கும். ஆனால் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் விவகாரத்தில் அவரின் கண்ணோட்டம் தெளிவற்றதாக உள்ளது என்று கூறப்படுகிறது.

காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ள, எகிப்தில் இஸ்ரேல்-ஹமாஸ் தரப்பினருடன் சர்வதேச மத்தியஸ்தர்கள் மீண்டும் பேச்சுவார்த்தையை ஞாயிற்றுக்கிழமை தொடங்கினர். ரமலான் பண்டிகையையொட்டி நோன்புக் காலம் தொடங்கும் முன், போர் நிறுத்தம் மேற்கொண்டு ஹமாஸிடம் உள்ள சில பிணைக் கைதிகளை விடுவிக்கும் நோக்கில் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது. (04)

# நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் 172 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வெற்றி!

## நதன் லயன் அபாரப் பந்து வீச்சு!






நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

இதன் மூலம், 2 ஆட்டங்கள் கொண்ட தொடரில் அந்த அணி முன்னிலை பெற்றது.

வெலிங்டனில் கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடங்கிய இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து, பந்துவீச்சை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த அவுஸ்திரேலியா, 115.1 ஓவர்களில் 383 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. கமரூன் கிரீன் 174 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்க, நியூஸிலாந்து பந்துவீச்சில் மட் ஹென்றி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய நியூ ஸிலாந்து, 43.1 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. கிளென் பிலிப்ஸ் 71 ஓட்டங்களைச் சேர்த்ததே அதிகபட்சமாக இருக்க, அவுஸ்திரேலிய பந்துவீச்சில் நதன் லயன் 4 விக்கெட்டுகளை சாய்த்தார்.

இதையடுத்து 194 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலியா, 51.1 ஓவர்களில் 164 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. நதன் லயன் 41 ஓட்டங்களை எடுத்தார். நியூஸிலாந்து தரப்பில் கிளென் பிலிப்ஸ் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இறுதியாக, 369 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய நியூஸிலாந்து, சனிக்கிழமை முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 111 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

4 ஆம் நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை ரச்சின் ரவீந்திரா 8 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உள்பட 59 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருக்க, டொம் பிளண்டெல் 0, கிளென் பிலிப்ஸ் 1, ஸ்காட் குகெலெஜின் 26, மட் ஹென்றி 14, கப்டன் டிம் சௌதி 7, டரில் மிட்செல் 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இதனால், 64.4 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்கு சுருண்டது நியூஸிலாந்து. 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலிய பந்துவீச்சில் நதன் லயன் 6, ஜோஷ் ஹஸல்வுட் 2, ட்ராவிஸ் ஹெட், கமரூன் கிரீன் ஆகியோர்




# தென்கொரியாவில் மருத்துவர்கள் போராட்டம் மருத்துவ மாணவர் சேர்கை முடிவுக்கு எதிர்ப்பு

தென்கொரியாவில் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்கும் அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்கொரியாவில் முதியோர் எண்ணிக்கை விகிதம் அதிகரிப்பை கருத்தில்கொண்டு மருத்துவக் கல்லூரிகளில் தற்போது உள்ள சுமார் 3,000 மாணவர் சேர்க்கை இடங்களை 5,000 ஆக அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது. வளர்ந்த நாடுகள் மத்தியில் தென்கொரியாவில்தான் மருத்துவர்கள் - மக்கள்தொகை விகிதம் குறைவாக இருப்பதாகவும் அரசு கூறுகிறது.

ஆனால், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை திடீரென அதிகரித்தால் அதற்கு ஏற்ற கட்டமைப்பு வசதிகள் இல்லை எனக் கூறி அரசின் திட்டத்துக்கு மருத்துவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கெனவே இளநிலை மருத்துவர்கள் பணிக்குச் செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்கள் பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்களின் மருத்துவ உரிமம் ரத்து செய்யப்படும் என அரசு எச்சரிக்கை விடுத்தது.

இதையடுத்து, இளநிலை மருத்துவர்களுக்கு ஆதரவாக தலைநகர் சியோலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பேரணியில் ஆயிரக்கணக்கான மூத்த மருத்துவர்களும் பங்கேற்றனர்.

இளநிலை மருத்துவர்களின் வேலைநிறுத்தத்தால் மருத்துவமனைகளில் நோயாளிகள் ஏராளமானோருக்கு அறுவை சிகிச்சைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. மூத்த மருத்துவர்கள் பேரணியில் மட்டுமே கலந்துகொண்டனர். அவர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் நாட்டின் மருத்துவ சேவையில் பெரும் பாதிப்பு ஏற்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

# எரிபொருட்களின் விலைகள் இன்று இரவு மாற்றமடையும்

எரிபொருட்களின் விலைகள் இன்று இரவு திருத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெப்ரவரி மாத இறுதியில் இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தாலும், அது இன்றுதான் இடம்பெறும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இன்று எரிபொருள் விலையில் பெரிய மாற்றம் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைய எரிபொருள் விலையை மாதாந்தம் திருத்தியமைக்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# சாய்ந்தமருது ஒக்ஸ்போர்ட் கல்லூரியின் 29 ஆண்டு நிறைவு – மாணவர் கௌரவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது ஒக்ஸ்போர்ட் கல்லூரியின் 29 ஆண்டு நிறைவு விழாவும், மாணவர்கள் விடுகை மற்றும் கௌரவிப்பு நிகழ்வும் கல்லூரி பணிப்பாளர் எஸ். ஜமால்தீன் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயம் பிரதானியும், கிழக்கு மாகாண அனைத்துப்பள்ளிவாசல்கள் பொதுநிறுவனங்கள் சம்மேளன நிறைவேற்று குழு உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்துகொண்டு பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்களின் வகிபாகம், சமூகத்தை நேசிக்கும் தலைவர்கள் இல்லாமல் போனமையால் சமூகம் அடைந்துள்ள துயரங்கள், எதிர்காலத்தில் பிள்ளைகளை சிறந்த தலைவர்களாக உருவாக்க பெற்றோர் செய்யவேண்டிய பணிகள், எதிர்காலம் மீது உள்ள சவால்கள் தொடர்பில் கருத்துரைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளரும், அல்- மீஸான் பௌண்டஷன்-ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், சாய்ந்தமருது பிரதேச முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வை. திருப்பதி, கல்முனை உப பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். ஆயிஷா, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஏ.எம். முபாரக், சியபத பைனான்ஸ் பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம். பாரீஹ் உட்பட அதிதிகள், பெற்றோர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை, கலாசசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்களைப் பாராட்டி அதிதிகளினால் மாணவர்களுக்கு சான்றிதழ், நினைவு சின்னங்கள், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.


# சிடார் விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

புத்தளம், புளிச்சாக்குளம் சிடார் விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள், நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, இறுதிநாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.



மேலும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.டி.எம்.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிக், பைசல் மரைக்கார், நிஜாம் மற்றும் அதிபர் சரீக், இணைப்பாளர் இர்ஷாட், மர்சூன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.




# “முதற்குடி மகன்” நூல் வெளியீடு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

மறைந்த முன்னால் கால்நடை வள பிரதி அமைச்சரும் புத்தளம் நகர பிதாவுமான மர்/ஹூம் கே.ஏ பாயிஸ் இன் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களின் தொகுப்பாக அவரின் பிரத்தியேக செயலாளரான எம்.எஸ் அப்பாஸ் எழுதிய “முதற்குடி மகன்” என்ற நூல் எதிர்வரும் 7 ம் திகதி வியாழக்கிழமை புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப்ஹக்கீம் இன் பிரசன்னத்தோடு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் 2023 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 34 பயனாளிகளுக்கு இந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

10 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த வீடுகளை முதற்கட்டமாக பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் பிரதம அதியாக கலந்து கொண்டு பயனாளிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீரங்கன் உட்பட பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கல்விக்கு முதலிடம், தமிழர் ஐக்கியத்துக்கு சிறப்பிடம் இரண்டிலும் கனடியர் – உலகத்தமிழருக்கு வழிகாட்டி!

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

இன்று, தமிழர்களாகிய எங்கள் ஒரே ஆயுதம், கல்வி. அதேபோல் எங்கள் ஒரே சிந்தனை தமிழ் ஒற்றுமை. இந்த இரண்டு கொள்கைகளையும் முன்னெடுத்து, கனடா தமிழர் பேரவை, அமெரிக்கா முதல் ஐரோப்பா, ஆசியா ஊடாக அவுஸ்திரேலியா வரை உலகம் முழுக்க பரவி, விரவி வாழ்கின்ற தமிழருக்கு, முன்மாதிரியாக நின்று வழி காட்டி உள்ளது.

இந்த இரு கொள்கைகளின் அடையாளமாகவே, இங்கே இன்று இந்த மலையக தமிழரினுள் வரும் பெருந்தோட்டப் பிள்ளைகள் பயிலும், தெஹியோவிற்ற தமிழ் மகாவித்தியாலய விஞ்ஞானகூடம் கட்டப்பட மற்றும் உபகரணங்கள் வழங்க, கனடா மற்றும் அமெரிக்கா வாழ் தமிழர்கள் மத்தியில் நிதி சேகரித்து, கனடா தமிழர் பேரவை சாதித்துக் காட்டியுள்ளது, என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனின் கோரிக்கையின் பேரில், கனடா தமிழர் பேரவையின் நிதிப் பங்களிப்பால், நிர்மாணிக்கப்பட்ட தெஹியோவிற்ற தமிழ் மகாவித்தியாலய விஞ்ஞானகூட அங்குரார்ப்பண விழாவில், மனோ கணேசன் எம்பி, கனடா தூதுவர் எரிக் வொல்ஷ், கனடா தமிழர் பேரவை நிர்வாகிகள் டென்டன் துரைராஜா, துஷ்யந்தன், உமாசுதன் சுந்தரமூர்த்தி, அசோகன் தம்புசாமி, எம்பிகள் ராதாகிருஷ்ணன், சுஜித் பெரேரா, உதயகுமார், பாடசாலை அதிபர் திலகலோஜினி, கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் உள்ளிட்ட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

கல்விக்கு முதலிடம், தமிழர் ஒற்றுமை ஆகிய இருமுனைச் செயற்பாட்டில், கனடா தமிழர் பேரவை ஆற்றியுள்ள பணி தொடர்பில் மனோ எம்பி குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்திடம் நிதி இல்லை. அது பற்றி ஒப்பாரி வைப்பதில் பயனும் இல்லை. நாளை அரசு மாறினாலும் சடுதி மாற்றம் வர போவதும் இல்லை. நிலைமை இயல்பு வாழ்வுக்கு திரும்ப பல ஆண்டுகள் ஆகும். இந்நிலையில் ஏற்கனவே இந்நாட்டில் ஒடுக்கப்பட்டு, பாரபட்சமாக நடத்தப்படும் தமிழர்கள், மென்மேலும் துன்பத்தை எதிர் நோக்குகிறார்கள்.



முதலாவது கல்வி. இங்கேதான், உலகம் முழுக்க புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் அடைகிறது. எம்மில் பல தேவைப்பாடுகள் இருந்தாலும், பிரதான தேவைப்பாடு, கல்வி என சான்றோர் தீர்மானித்து விட்டார்கள். அதைதான் "கல்விக்கு முதலிடம்" என்கிறோம். கல்வி கிடைத்து விட்டால், ஏனைய எல்லா வளங்களும் வந்து சேர வேண்டிய இடத்தில் வந்து சேர்ந்து, பொருந்தி விடும். அதை கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள். இலங்கை முழுக்க வாழும் தமிழ் மாணவர்களின் முன்பள்ளி கல்வி முதல், உயர்கல்வி வரை மிகப்பெரும் சவால்களை நமது இனம் எதிர்கொள்கிறது. அவற்றை நாம், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உடன் பிறப்புகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக சந்திப்போம்.

இரண்டாவது, தமிழர் ஒற்றுமை. இந்நாட்டில் தனித்துவ அடையாளங்களை கொண்ட ஈழத்தமிழர், மலையகத்தமிழர் ஆகியோர் மத்தியில் ஏற்படக்கூடிய இயல்பான ஒன்றுசேர்வின் மூலமாகவே இலங்கை வாழ் தமிழர் ஒற்றுமை ஓங்க முடியும். எமக்கு வேறு வழி கிடையாது. அதையும் கனடிய தமிழர் உணர்ந்து உள்ளார்கள்.

அதன் காரணமாகவே, மலையக தமிழரின் இலங்கை குடிபுகு 200 ஆண்டு பூர்த்தியின் அடையாளமாக நிதி சேகரிப்பை நடாத்தி இந்த பெரும் பணியை ஆற்றி உள்ளார்கள். பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் எம் தமிழர் எம்மையும் அரவணைகிறார்கள் என்ற செய்தி இன்று இங்கே மலையக தமிழ், பெருந்தோட்ட மக்களை உணர்வுபூர்வமாக சென்று அடைகிறது. இதைவிட தமிழர் ஒற்றுமைக்கு சான்று என்ன வேண்டும்?

நாம் இப்போது "தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழகம்" அமைத்துள்ளோம். அதன் தலைவராக, தகைமையுள்ள நண்பர் அதிபர் பரமேஸ்வரனை நியமித்துள்ளோம். நாடாளுமன்ற சட்டப்படி கூட்டிணைக்கப்படும் இந்த கல்வி கழகத்தின், கல்விக்கு முதலிடம் என்ற கருப்பொருளில் இணையத் தளம் வெகு விரைவில் அறிமுகமாகும். அதில், இலங்கை முழுக்க அனைத்து மாவட்டத் தமிழர் கல்வித் தேவைகள் தொடர்பில் நம்பகத் தன்மை கொண்ட தகவல் பதிவேற்றம் செய்யப்படும். ஆகவே, உலகத் தமிழர் அவற்றை தெரிந்து அறிந்து நேரடியாக உதவிடலாம், எனவும் அவர் தெரிவித்தார்.








## இரண்டாம் மொழி சிங்களம் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கல் நிகழ்வு



(சர்ஜூன் லாபீர்)


அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியாலம் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு இரண்டாம் மொழி சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, விசேட அதிதிகளாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எப்.சாஹீனா, கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், இரண்டாம் மொழி பயிற்சி நெறிக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல் பிர்தௌசியா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளரினால் "முயற்சியும், வெற்றியும் மற்றும் பாராட்டுக்களும்" எனும் தலைப்பில் பல வியங்களை மையப்படுத்தி உரையும் நிகழ்த்தப்பட்டிருந்தது.

## மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் பொதுக்கூட்டம் வரும் 23 ஆம் திகதி



(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் தேதி தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான செயற்குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராசா சென்ற கூட்டறிக்கை வாசிக்க ஆரம்பமானது.

சங்கத்தின்பொருளாளர்க..தியாகராஜாவினால் பொருளாளர் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க துணைத்தலைவர் அமரர் ஆ.மு.சி. வேலழகனது நூல் வெளியீடு மற்றும் நினைவுப் பேருரை பற்றிய தீர்மானமெடுக்கப்பட்டது.

சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் சார்ந்த கருத்துக்கள் செயற்குழு உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன. சங்கப் பொதுச் செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
DOWNLOAD DRIVER APP
JRide Driver
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!